**அளவ்வ பிரதேச சபையின் - 2022**

**-----------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவ்வ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து அளவ்வ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வழங்கல் கடன்கொடுத்தோர் இரட்டைக் கணிப்புச் செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 369,870 தொகை, நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் ரூபா 20,027 தொகை மற்றும் ரூபா 8,550,000 பெறுமதியான 40 உத்தேச செயற்திட்டங்கள் உடன்படிக்கை செய்யப்படாது கடன்கொடுத்தோராகக் கணக்கீடு செய்யப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான செலவுகளும் கடன்கொடுதோரும் அதிகரித்:துக் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 2023 ஆம் ஆண்டிற்காக முன்னரே பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 17,750 தொகை ஆண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முன்னரே பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தை அடுத்துவரும் ஆண்டின் போது சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். . | -மேற்படி- |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் மற்றும் மீளாய்வுச் சபை அறிக்கைகளுக்கு இணங்க நூல் நிலையப் புத்தகத்தின் பெறுமதி ரூபா 41,294 ஆலும் பொதுக் களஞ்சியத்திலுள்ள இருப்புக்கள் ரூபா 55,059 ஆலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு இணங்க காணிகளும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 1,200,431 ஆலும் வித்தியாசமாகவிருந்தது. | 2023 நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய வித்தியாசத்தை இனங்கண்டு பதிவேடுகளைச் சரிசெய்து கணக்குகளைச் சரிசெய்தல் வேண்டும். |

**1.6.3 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வட்டியுடன் ரூபா 2,531,458 பெறுமதியான நிலையான வைப்புக்கள் சபை அங்கீகாரமின்றி சபை நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | கொரோனா தொற்றுநோய் மற்றும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையின் அடிப்படையில் சபையின் அத்தியவசியமான செலவுகளுக்காக போதியளவு நிதி எற்பாடு கிடைக்காமையின் அடிப்படையில் ஏனைய ஆண்டுகளில் செயற்பட்ட வகையிலேயே இந்த ஆண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சிறந்த நிதிக் கட்டுப்பாட்டுடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் - பிரதேச சபை விதி 61 | வியாபார அனுமதிப்பத்திரம், நிர்மாண வேலை வரி, வியாபார வரி என்பன தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது மீளாய்வு செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டியல்கள் அனைத்தும் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படும் எனவும் அதற்கிணங்க அனைத்து அனுமதிப்பத்திரங்களையும் தட்டுப்பாடின்றி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரசேத சபை சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை - நி.பி 371(3) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 62,000 தொகையான முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படவில்லை. | அடுத்துவரும் ஆண்டுகளின் போது உரிய ஆண்டிலேயே முற்பணத்தை தீர்த்துதவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 36,877,344 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 530,541 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமனம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** |
| | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| வீத வரியும் வரியும் | 7,861 | 5,950 | 4,939 | 2,012 | 5,392 | 4,748 | 3,746 | 1,001 |
| வாடகை | 9,686 | 9,550 | 9,589 | 8 | 12,128 | 6,996 | 6,969 | 47 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,021 | 576 | 576 | - | 977 | 484 | 484 | - |
| ஏனைய வருமானம் | 6,683 | 9,979 | 9,979 | | 6,407 | 5,121 | 5,121 | - |
| மொத்தம் | 25,251 | 26,055 | 25,083 | 2,020 | 24,904 | 17,349 | 16,320 | 1,048 |

### 2.2.2 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,001,615 நிலுவையில் ரூபா 624,450 பணமும் ஆண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 5,950,667 பணத்தில் ரூபா 1,387,714 தொகையும் அறவிடப்படவில்லை. | அடுத்துவரும் காலங்களில் நிலுவை வருமானத்தை அறவீட செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும். | நிலுவை வருமானத்தையும் பட்டியலிடப்பட்ட வருமானத்தையும் அறவீட செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபையினால் பேணப்பட்டு வருகின்ற கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 19,240,898 மீண்டுவரும் செலவு மேற்கொண்டு 302 தொன் உக்கும் கழிவுப் பொருட்களும் 126 தொன் உக்காத கழிவுப் பொருட்களும் சேகரிக்கப்பட்டிருந்தது. உக்குகின்ற கழிவுப் பொருட்களின் மூலம் ஆண்டின் போது 64 தொன் சேதனப் பசளைகள் உற்பத்தி செய்யப்பட்டு 57 தொன்களை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 860,595 வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் 17 தொன் உக்காத கழிவுப் பொருட்களை விற்பனை செய்து ரூபா 550,542 வருமானமும் உழைக்கப்பட்டிருந்தது. | அளவ்வ பிரதேச சபையினால் பேணப்படுகின்ற கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் நகரத்திலுள்ள கழிவுப் பொருட்களை முறையாக முகாமைத்துவம் செய்யும் ஒரு செயற்திட்டமாக பேணப்பட்டு வருகின்றது. | உக்குகின்ற கழிவுப் பொருட்களையும் உக்காத கழிவுப் பொருட்களையும் முறையாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை பிரதேச சபையினால் கட்டிடங்களுக்காக 11 இணக்கப்பாட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த அலகுகளுக்காக மதிப்பீட்டினைப் பெற்று வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் இணக்கப்பாட:ட சான்றிதழ்களை பெற்றுக்கொள்வடேதாடு மீண்டும் மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்து விதவரிக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானங்களை அதிகரிக்கச் டிசய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் காணிகளை அபிவிருத்தி செய்து விற்பனை செய்வது தொடர்பாக விற்பனைப் பெறுமதியில் 1 சதவீத வரிப் பணத்தை சபைக்கு பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் கொஹம்பகஹமுல் கம்மல்தெனிய தோட்ட காணியின் விற்பனைப் பெறுமதியியினை விட குறைந்த பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சபைக்கு ரூபா 169,425 நட்டம் ஏற்பட்டிருந்தது. | காணி விற்ற பெறுமதியை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் மிகுதி நிலுவையில் 1% ஆன வரிப்பணத்தை உரிய ஏல விற்பனையாளரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்பேன். | உரிய நிறுவனத்தின் விற்பனை அறிக்கையை பெற்றுக்கொண்டு நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) அளவ்வ பஸ்தரிப்பிட கடைகளின் பழைய குத்தகைதாரர்களுக்கு கேள்வி கோரப்படாது வழங்கப்பட்டிருந்தும் அந்த குத்தகைதாரர்களிடமிருந்து மதிப்பீடு செய்யப்பட்ட ஒரே தடவையில் செலுத்தும் பணத்தில் 50% ஆன பணத்தை | அளவ்வ பஸ்தரிப்பிட கடைகளுக்கு கேள்வி கோரும் போது பழைய குத்தகைதாரர்களுக்கு கேள்வி கோரப்படாது கடைகளை வழங்குதல் இடம்பெற்றிருந்தும் அக்குத்தகைதாரர்களிடமிருந்து மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தில் | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்வதற்கு 2016 ஆம் ஆண்டில் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருரந்தும் பழைய குத்தகைதாரர்களின் வேண்டுதல்களின் அடிப்படையில் அதனை 60 தவணைப் பணங்களில் செலுத்துவதற்காக சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இந்த பழைய குத்தகைதாரரினால் 2016 மே மாத்திலிருந்து 2021 ஏப்ரல் மாதமளவில் இந்த ஒரே தடவையில் செலுத்தும் பணம் ரூபா 21,000,000 செலுத்தி பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 ஏப்ரல் மாதம் வரை எந்த தவணைப் பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 50% ஆன பணத்தை பெற்றுக்கொள்ளுமாறும் அதனை 60 தவணைகளில் செலுத்துவதற்காக சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. | |
| (ii) | சபையினால் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்ற 10 காணிகள் மீளாய்வாண்டு வரையும் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பேற்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | சபை பயன்படுத்திய காணிகளை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது தெரு விளக்குகளைக் கொள்வனவு செய்யும் போது பல்பிற்காக ஆகக் குறைந்த விலையான ரூபா 839 இனை சமர்ப்பித்திருந்த விலைமனு நிராகரிக்கப்பட்டு ஐந்தாவது ஆகக் குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனங்களிடமிருந்து ரூபா 1,246.50 வீதம் 23 வோட் CFL பல்புகளில் 1,000 பல்புகள் கொள்வனவு செய்யப்பட்டதனால் சபைக்கு ரூபா 407,500 நட்டம் ஏற்பட்டிருந்தது. | பல்பிற்கான ஆக்ககுறைந்த விலையான ரூபா 839 இனை சமர்ப்பித்த விலைமனு நிராகரிக்கப்பட்டு ஐந்தாவது ஆகக் குறைந்த விலையின் அடிப்படையில் பல்புகளை கொள்வனவு செய்வதற்கு திர்மானிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக்கு இணங்க திறந்த விலை மனுக்களை கோரி போட்டிக்கு வழி ஏற்படுத்தி சபைக்கு உச்ச அளவில் சாதகமான பெறுகை நடைமுறையினைத் தெரிவு செய்தல் வேண்டும். |

4. **கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.**

**சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையிடம் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் காணப்பட்டிருந்தும் கழிவு நீரினை வெளியேற்றுவதற்காக நியம தரமான மீள் சழற்சி முறைமை இல்லாதிருந்தும் சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவு நீரினை கழிவுநீர் வாகனத்தைப் பயன்படுத்தி நீக்கி கழிவுப் பொருள் மீள் சுழற்சி நிலையத்தில் குழி வெட்டி அதனுள் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது 53 கழிவு நீர் வாகனங்கள் எடுத்துவந்த கழிவுப் பொருள் முகாமைத்துவ காணியில் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் கொங்கிரீட் கல் பிடித்த உறிஞ்சும் குழி நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழி பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் கழிவு நீரினை அகற்றுவதற்கு சேவை நாடுனர்களிடமிருந்து பணம் அறவிடுதல் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் நாளாந்தம் கழிவுநீரினை அகற்றுதல் இடம்பெறாததுடன் குழி குறைவடைகின்ற அளவின் அடிப்படையில் கழிவுநீரை அதற்குள் வெளியாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் கழிவுப் பொருளை வெளியாக்குதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |